நா நா ஜீவ வாதக் கட்டளை

வெளியீடு :

கோவிலூர் ஆதீனம்

1976

ஸ்ரீ பட்டனார் அருளிய

பகவற்கீதை

(சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல
ஞான தேசிக ஸ்வாமிகள் உரையுடன்)

விலை ரூ. 6-00

ஸ்ரீ தாண்டவராய ஸ்வாமிகள் அருளிய

கைவல்ய நவநீதம்

(சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல
ஞான தேசிக ஸ்வாமிகள் உரையுடன்)

விலை ரூ 6-00

கிடைக்குமிடம்:

கோ. சித. மடாலயம்,
49, 50, மன்னார்குடி சாலைத்தெரு,
சிதம்பரம்
Pin: 608 001.

நா நா ஜீவ வாதக் கட்டளை

ஸ்ரீ சேஷாத்திரி சிவனுர்

அருளியது

வெளியீடு:

கோவிலூர் ஆதீனம்

சிறப்புப் பாயிரம்.

இப்பியி னிடையே எழும்இர சதம்போல்
என்றுமாய் இலகிஇன் பாகி,
ஒப்பிட ஏதும் இன்றிய பிரமத்து
உற்றிடும் பகுதிமுன் னுய,
அப்பிர பஞ்ச முறைமையைத் தூல
அருந்ததி நியாயமே என்னச்,
செப்பினன் யாரும் தெளிவுறச் சேஷாத்
திரிசிவன் என்னுமா தவனே.

நா நா ஜீவ வாதக் கட்டளை

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன் ஞாநகுரு வாணியை உள்நாடு.

சுத்தப் பிரமமாய் இருக்கின்ற சர்வ சாக்ஷியினிடத்திலே, அக்கிநியில் சூடுபோல அபிந்நமாக ஒரு சத்தி உண்டு; அந்தச் சத்தி அவ் அதீதப் பிரமத்தில் அடங்கியிருக்கும்போது அதற்கு சுத்தப்பிரமம் என்று பெயர். அந்தச்சத்தி விசிரிம்பித்து சுத்தப் பிரமத்தை வியாபிக்கும் போது அப் பிரமம் பரை வியாபகத்துக்குள் இருந்தபடியினாலே. அதற்கு பரப்பிரமம் என்று பெயராம். இலக்ஷண சூந்யமாய் இருக்கின்ற இந்த சத்திக்கு பிரமத்தினுடைய சந்நிதாநத்தில், புருட சமுகத்திலே ஸ்திரீக்கு இன்பம் சநித்தாற்போல, அவிகிர்த சத்துவ, ரஜஸ், தமோ குணங்கள் உண்டாயின. இவற்றில், சுத்த சத்துவத்திற்கு ஆநந்த ரூப சத்தி என்றுபெயர். சுத்த ரஜஸிற்கு சித் ரூப சத்தி என்று பெயர். சுத்த தமஸிற்கு சத் ரூப சத்தி என்று பெயர். இவற்றில், காரணமான ஆநந்தரூப சத்தியுடனே பரப்பிரமம் கூடி சர்வாநந்தம் என்னும் சுழுத்தி அவஸ்தையை அடைகின்றபோது, பரப்பிரமம் என்கின்ற பெயர்போய் பரமாநந்தர் என்கிற பெயர்

வந்தது. இந்தப் பரமாநந்தர் சித்ரூபசத்தியுடனே கூடி சர்வப்பிரகாசம் என்னும் சொப்பநாவஸ்தையை அடைகின்றபோது, பரமாநந்தர் என்னும் பெயர் போய் தேசோமயர் என்னும் பெயர் வந்தது. இந்த தேசோமயர் சத்ரூப சத்தியுடனே கூடி சர்வவியாபகம் என்னும் சாக்கிராவஸ்தையை அடைகின்றபோது தேசோமயர் என்னும் பெயர்போய் பரிபூரணர் என்னும் பெயர் வந்தது.

இந்த அகண்ட பரிபூரண சச்சிதாநந்தப் பிரமத்தினிடத்திலே, சுத்தியில் ரஜதம்போல, மூலப்பிரகிருதி என்னும் ஒரு சத்தி உண்டு. அந்த மூலப் பிரகிருதியும் விகிர்த குணமாகிய முக்குணத்தோடு கூடியிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவ குணத்தை மாயை என்றும் சர்வக்ஞ உபாதி என்றும், ஈசுர காரண சரீரம் என்றும் சொல்லப்படும். இந்த மாயையினிடத்திலே நிர்மல சலப் பிரதிபிம்பம் போலப் பிரமம் சுலட்சணமாகப் பிரதிபிம்பிக்கும். இந்தப் பிரதிபிம்ப சைதந்நியத்தை சர்வக்ஞுகிய ஈசுரன் என்று சொல்லப்படும். இந்த சத்துவகுண மாயையினிடத்திலே, சத்துவத்தில் சத்துவம், சத்துவத்தில் ரஜஸ், சத்துவத்தில் தமஸ் என மூன்று குணங்கள் உண்டு. இவைகளில், சத்துவத்தில், சத்துவம் பிரதாநமாகும்போது, அதில் பிரதிபிம்பித்த ஈசுரன் சகத்தை

இரக்ஷிக்கையினால் விஷ்ணு என்றும். சத்துவத்தில் ரஜஸ் பிரதாநமாகும்போது, அதில் பிரதிபிம்பித்த ஈசுரன் சகத்தை சிருஷ்டிக்கையினால் பிரமா என்றும், சத்துவத்தில் தமஸ் பிரதாநமாகும்போது, அதில் பிரதிபிம்பித்த ஈசுரன் சகத்தை உபசம்மாரம் பண்ணுகையினால் உருத்திரன் என்றும் சொல்லப்படுவான்.

இப்படி மூலப்பிரகிருதியின் சத்துவகுண கற்பனை சொல்லப்பட்டது.

இனி, மூலப்பிரகிருதியின் இரஜோ குணம் அநேக ரூபமாய்ப் பிரிந்து, அவித்தைகள் என்றும், சீவ காரண சரீரங்கள் என்றும், ஒன்றற்கொன்று தாரதம்மியமாகச் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலும் மலிந சலப் பிரதிபிம்பம்போல பிரமசைதந்யம் பிரதிபிக்கும். இந்த பிரதிபிம்ப சைதந்யங்களை கிஞ்சிக்ஞர் என்றும், ஜீவசிதாபாசா என்றும், பிராக்ஞர் என்றும் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலேயும் ரஜஸில் சத்துவம், ரஜஸில் ரஜஸ், ரஜஸில் தமஸ் என மூன்று குணங்கள் உண்டு. ரஜஸில் சத்துவம் பிரதாநமாகும் போது, அதில் பிரதிபிம்பித்த சிதாபாசன் தத்துவக்ஞாந நிஷ்டன் ஆவன். ரஜஸில் ரஜஸ் பிரதாநமாகும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசன் காமக் குரோதபரனாய்க்

கர்மநிஷ்டன் ஆவன். இரஜஸில் தமஸ் பிரதாநமாகும் போது, அதில் பிரதிபிம்பித்த சிதாபாசன் சோம்பல், நித்திரை, மயக்கம் ஆகிய இவைகளை அடைவன்.

இப்படி மூலப் பிரகிருதியின் இரஜோகுண கற்பனை சொல்லப்பட்டது.

இனி, மூலப் பிரகிருதியின் தமோ குணத்திற்கு ஆவரணம், விக்ஷேபம் என இரண்டு சத்திகள் உண்டு. இவ்விரண்டில், ஆவரண சத்தியானது தத்துவஞ்ஞாநியையும் ஈசுரனையும் தவிர, மற்றைச் சீவருக்கெல்லாம் சரீரத் திரயம், சிதாபாசன், சாக்ஷி சைதந்நியம் என்னும் இவைகளின் ஒன்றற்கொன்று உள்ள பேதம் தெரியவொட்டாமல் மறைக்கும். இதனால் மறைபட்ட சீவர் இருபத்தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக நான் என்று அபிமாநிப்பார். இந்த அபிமாநத்தை, அகங்காரக் கிரந்தி என்றும், சம்சாரபந்தம் என்றும் சொல்லப்படும். சற்குரு கடாக்ஷத்தினாலே, இந்த ஆவரணம் நீங்கி, இருபத்தொன்பது தத்துவங்களின் ஒன்றற்கொன்றுள்ள பேதம் தெரிகின்றதே முத்தி.

இப்படி ஆவரணசத்தியின் காரியம் சொல்லப்பட்டது.

இனி, விக்ஷேப சத்தியினின்றும் சத்த தந்மாத்திரையான ஆகாசம் தோன்றிற்று. ஆகாசத்தினின்றும் பரிச தந்மாத்திரையான வாயு தோன்றிற்று. வாயுவினின்றும் ரூப தந்மாத்திரையான அக்கிநி தோன்றிற்று. அக்கிநியினின்றும் ரஸ தந்மாத்திரையான அப்பு தோன்றிற்று. அப்புவினின்றும் கந்த தந்மாத்திரையான பிருதிவி தோன்றிற்று. இந்த சூக்ஷ்ம பஞ்சபூதத்திற்குக் காரணமாய் இருக்கின்ற விக்ஷேப சத்தியினிடத்திலே, தமஸில் சத்துவம், தமஸில் ரஜஸ், தமஸில் தமஸ் என்னும் இவை அற்பம் கருவாக இருந்தபடியால் அதன் காரியமாகிய இந்தத் தந்மாத்திரைகளான பஞ்ச பூதங்களும் முக்குணங்களுடனே பிறந்தன. இந்தப் பஞ்ச பூதங்கட்குத் தந்மாத்திரைகள் என்றும், அபஞ்சீகிருத பூதங்கள் என்றும், சூக்ஷ்ம பூதங்கள் என்றும், முக்குண பூதங்கள் என்றும் சாஸ்திரங்களில் நாமம் சொல்லப்படும்.

இந்தசூக்ஷ்ம பூதங்களினின்றும் சூக்ஷ்மசரீரங்களும், ஸ்தூல பூதங்களும்தோன்றும். அஃது எங்ஙனம் எனின்:- ஆகாசம் முதலான பஞ்சபூதங்களின் சத்துவஅம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்து ஒன்ருகக் கூட்டி வைத்தது அந்தக்கரணம். இந்த அந்தக்கரணத்தில், ஆகாசத்தின் அம்சம் கூடினதற்கு அடையாளம்,

இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போல சகலமான கேள்விக்கும் இடம் கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற ○ விருத்திக்கு ● உள்ளம் என்று பெயர். இந்த அந்தக்கரணத்தில், வாயுவின் அம்சம் கூடினதற்கு அடையாளம், இந்த அந்தக் கரணமும் வாயுவைப்போல அலைகின்றது. இப்படி அலைகின்ற விருத்திக்கு மநம் என்று பெயர். இந்த அந்தக்கரணத்தில், அக்கிநியின் அம்சம் கூடினதற்கு அடையாளம், இந்த அந்தக்கரணமும் அக்கிநியைப்போல ஈதுஇன்னது என்று விளக்குவிக்கின்றது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்கு புத்தி என்று பெயர். இந்த அந்தக்கரணத்தில், அப்புவின் அம்சம் கூடினதற்கு அடையாளம், இந்த அந்தக்கரணமும் அப்புவைப் போல விஷயங்களில் பற்றி இழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்கு சித்தம் என்று பெயர். இந்த அந்தக் கரணத்தில், பிருதிவியின் அம்சம் கூடினதற்கு அடையாளம், இந்த அந்தக்கரணமும் பிருதிவியைப்போல கடிநமாக நின்று நானென்று அபிமாநிக்கின்றது; இந்த அபிமாந விருத்திக்கு அகங்காரம் என்று பெயர்.

○ விருத்தி - பரிணாமம். ● உள்ளம் - தேஜஸ் என்றும் பாடமுளது.

இன்னும், ஆகாசம் முதலான பஞ்ச பூதங்களினுடைய சத்துவ அம்சத்திலே, பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்து தனித்தனியே வைத்தது சுரோத்திராதிஞாநேந்திரியம்என்றுசொல்லப்படும். இவைகளில், சுரோத்திரம், ஆகாசத்தின் அம்சம் ஆனபடியால் ஆகாசத்தின் குணமான சத்தம் மாத்திரத்தை அறியும். துவக்கு, வாயுவின் அம்சம் ஆனபடியால் வாயுவின் குணமான பரிசம் மாத்திரத்தை அறியும். சக்ஷு, அக்கிநியின் அம்சம் ஆனபடியால் அக்கிநியின் குணமான ரூபம் மாத்திரத்தை அறியும். சிங்ஙுவை, அப்புவின் அம்சம் ஆனபடியால் அப்புவின் குணமான ரஸம் மாத்திரத்தை அறியும். கிராணம் பிருதிவியின் அம்சம் ஆனபடியால் பிருதிவியின் குணமான கந்தம் மாத்திரத்தை அறியும். இப்படி ஐந்தும் ஒன்றேடொன்று கூடாதபடியால் ஒன்று மற்றென்றின் குணத்தைக் கிரகிக்க அறியாது. அந்தக்கரணத்தில், ஐந்து மாத்திரையும் ஒன்ருய்க் கூடினது கொண்டு ஐந்து இந்திரியங்களினுலும், ஐந்து விஷயங்களையும் அறியும். இந்த சத்துவ குணத்தில் உண்டான அந்தக்கரணம் ஐந்து, ஞாநேந்திரியம் ஐந்து, ஆகப்பத்தும் சத்துவ அம்சம் ஆனபடியால் ஞாநசாதநம் ஆயின.

இன்னும், ஐந்து பூதங்களினுடைய இரஜோம்சத்திலே, பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்து

ஒன்ருகக் கூட்டிவைத்தது வியாநாதி பஞ்ச வாயுக்கள். இவைகளில், வியாநவாயு ஆகாசத்தின் அம்சம் ஆன படியால் ஆகாசத்தைப்போல சர்வாங்கமும் வியாபித்திருக்கும். பிராணவாயு வாயுவின் அம்சம் ஆனபடியால் வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசிகாதிபரியந்தம் அலையும். அபாநவாயு அக்கிநியின் அம்சம் ஆனபடியால் அக்கிநியைப் போல சாடராக்கிநியாக உஷ்ணித்துக் கொண்டு குதத்தைப் பற்றி நின்று, உண்ட வந்ந பாநாதிகளை சீரணிப்பிக்கும். சமாநவாயு அப்புவின் அம்சம் ஆனபடியால் சரீர நடுவான நாபித்தாநத்தில் நின்று உண்ட அந்நரசங்களை அப்புவைப்போல இழுக்கும். உதாநவாயு பிருதிவியின் அம்சம் ஆனபடியால் கண்டத்தைப்பற்றி பிருதிவியைப்போலக் கடிநமாக நின்று, உண்ட அந்நபாநாதிகளைக் கடையும். இந்தப் பஞ்ச வாயுக்களையும் அல்லாமல், வாந்தி பண்ணுவிக்கின்றது நாகன் என்றும், இமைத்து விழிப்பிக்கின்றது கூர்மன் என்றும், குறுகுறுத்துத் தும்மச் செய்கின்றது கிரிகரன் என்றும், கொட்டாவி கொள்ளச் செய்கின்றது தேவதத்தன் என்றும், வீங்கச் செய்கின்றது தநஞ்சயன் என்றும், வேறே ஐந்து வாயுக்கள் உண்டென்று சிலர் சொல்லுவர். இவ் ஐந்தும் பிராணனுடைய தொழில் ஆனபடியால் வேறல்ல.

இன்னும், ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களினுடைய இரஜோ அம்சத்திலே, பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்து தனித் தனியே வைத்தது வாக்காதி கர்மேந் திரியம் என்று சொல்லப்படும். இவைகளில், ஆகாசத் தின் இடமாக வாக்கு வசநிக்கும். வாயுவின் இடமாக பாணி இடுதல், ஏற்றல்செய்யும். அக்கிநியின் இடமாக பாதம் நடக்கும். அப்புவின் இடமாக பாயுரு மலசலா திகளை வெளியிலே தள்ளும். பிருதிவியின் இடமாக உபஸ்தம் சுகத்தைப் பண்ணும்; இந்த ஐந்தும் தனித்தனியே இருந்ததுகொண்டு மறுதொழில் செய்ய மாட்டாது. வியாநாதி வாயுக்கள் ஐந்து மாத்திரையும், ஒன்றுய்க் கூடினதுகொண்டு, கர்மேந்திரியம் ஐந்தின் வழியினுலும் ஐந்துதொழில்களையும் செய்துமுடிக்கும், இந்த வாயுக்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, ஆகப் பத்தும் இரஜோ அம்சம் ஆனபடியினுல் கிரியா சாதநம் ஆயின. அந்தக்கரணம்-5, ஞாநேந்திரியம்-5, வாயுக்கள்-5, கர்மேந்திரியம்-5, ஆக இருபது தத்துவமும் சூக்ஷ்ம சரீரம் என்று சொல்லப்படும். இந்த சூக்ஷ்ம சரீரத்தை மாயாப் பிரதிபிம்பனுக இருக்கின்ற ஈசுரன், அவித்தையாப் பிரதிபிம்பர் ஆகிய சீவர்கள் அநேகர் ஆகையால் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சரீரமாகச் சிருஷ்டித்து அளித்தான்.

இப்படி சூக்ஷ்ம சரீர கற்பனை சொல்லப்பட்டது.

இனி, ஸ்தூல பூத உற்பத்தி சொல்லுகின்றோம்; அஃது எங்ஙனம் எனின்:-தமோ அம்சமாய் இருக்கின்ற ஐந்து பூதங்களையும், ஒவ்வொன்றை இரண்டு இரண்டாகப் பகுத்து, முதற்பாதி ஐந்தையும் ஒவ்வொன்றை நான்கு நான்காகப் பகுத்து, இரண்டாம் பாதி ஐந்தில், தன் அம்சத்துடனே கூட்டாமல் மற்றை நான்கு பூதங்களுடன் அரைக்கால் அரைக்கால் மாத்திரையாக கொடுக்கின்றது பஞ்சீகரணம் என்று சொல்லப்படும். இப்படி பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களில் ஆகாசத்திலே பரிச, ரூப, ரஸ, கந்தம் ஆகிய நான்கு குணங்களும் வியாப்பியம் ஆனபடியால், அதிருசியமாய்ப் போக நிசகுணமாகிய சத்தம் திருசியமாம் வாயுவிலே, ரூப, ரஸ, கந்தம் ஆகிய மூன்று குணங்களும் வியாப்பியம் ஆனபடியினுல் அதிருசியமாய் போக காரண குணமாகிய சத்தமும், நிச குணமாகிய பரிசமும் திருசியமாம். அக்கினியிலே, ரஸ, கந்தம் ஆகிய இரண்டு குணங்களும் வியாப்பியம் ஆனபடியினுல் அதிருசியமாய்ப் போக காரண குணங்களாகிய சத்த, பரிசமும், நிச குணமாகிய ரூபமும் திருசியமாம். அப்புவிலே, கந்தகுணம் வியாப்பியம் ஆனபடியினுல்

அதிருசியமாய்ப் போக காரண குணங்களாகிய சத்த, பரிச, ரூபமும், நிச குணமாகிய ரஸமும் திருசியமாம். பிருதிவியிலே, காரண குணங்களாகிய சத்த, பரிச, ரூப, ரஸமும், நிச குணமாகிய கந்தமும் திருசியமாம்.

முன் சூக்ஷ்ம பூதங்களினின்றும் சூக்ஷ்ம சரீரங்கள் தோன்றினாற் போல, பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூல பூதங்களினின்றும், ஆறு தத்துவமாய், நால்வகைப் பிறப்பாய், மூவகைச் சாதியாய் இருக்கின்ற ஸ்தூல சரீரங்கள் தோன்றின. இவற்றுள், ஆறு தத்துவங்களாவன:- சர்மம், உதிரம், மாமிசம், சநாயு, அத்தி, மஜ்ஜை என்னும் இவைகளாம். நால்வகைத் தோற்றங்களாவன:- சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜ்ஜம் என்னும் இவைகளாம். மூவகைச் சாதிகளாவன:-இகலோகபரலோகபுத்தி இருவகையுங்கொடுக்கின்ற மநுட சரீரம் உத்தம சாதி. பரலோக புத்தியை மறைத்து, இக லோக புத்தி மாத்திரம் கொடுக்கின்ற பசு, பக்ஷி முதலானவை மத்திம சாதி. இரண்டு லோக புத்தியையும் மறைத்திருக்கின்ற மரம், செடி, கொடி முதலியவை அதம சாதி. இப்படி பிருதிவி தத்துவமாய் இருக்கின்ற பூலோகத்தில் கண்டாற்போல, அப்பு, அக்கினி, வாயு, ஆகாசம் என்னப்பட்ட தத்துவங்களாய்,

நிரை நிரையே இருக்கின்ற பிதிர்லோகம், தேவலோகம், யட்ச கந்தர்வ சித்தர் லோகங்களிலும், நட்சத்திரமாகத் தோற்றுகின்ற சந்திரன் முதலான பிதிர்க்கள், சூரியன் முதலான தேவதைகள், கந்தருவர் சித்தர் என்னப் பட்டவர்கள் உத்தம சாதி. காமதேநு, ஐராவதம், அந்நம், கருடன் முதலானவை மத்திம சாதி. கற்பக விருட்சம், பாரிசாதம் முதலானவை அதம சாதி. இந்தத் தூல சரீரமே அந்நமய கோசம், சூக்ஷ்ம சரீரம் மூன்று கோசங்களாய் இருக்கும். அஃது எங்ஙனம் எனின்:- பிராண வாயுவும், கர்மேந்திரியங்களும் கூடி பிராணமய கோசம், மநதும், ஞாநேந்திரியங்களும் கூடி மநோமய கோசம், புத்தியும், ஞாநேந்திரியங்களும் கூடி விஞ்ஞாந மய கோசம், காரண சரீரமே ஆநந்த மய கோசம்.

இப்படி பஞ்சகோசம் சொல்லப்பட்டது.

ஆறு தத்துவங்களாய் இருக்கின்ற ஸ்தூல சரீரத் திலே, இருபது தத்துவங்களாய் இருக்கின்ற சூக்ஷ்ம சரீரம் இருக்கின்றது. அஃது எப்படி எனின்:- கர்மேந் திரியங்களுள் வாக்கும், ஞாநேந்திரியங்களுள் சிங்நுவை யும், வாயில் இருக்கும். உதாந வாயுவும், மநதும், கண்டத்தில் இருக்கும். பிராண வாயும், புத்தியும், இருதயத்தில் இருக்கும். சமாந வாயுவும், சித்தமும்,

நாபியில் இருக்கும். அபாந வாயுவும், பாயுருவும், குதத்தில் இருக்கும். வியாந வாயுவும், ஞாநேந்திரியங்களுள் துவக்கும், அகங்காரமும், சர்வாங்கமும் வியாபித்திருக்கும். உச்சியிலே உள்ளமும், கருவிழி நுனியிலே சக்ஷுரிந்திரியமும், காதிற்குள்ளே சுரோத்ரேந்திரியமும், மூக்கு நுனியிலே கிராணேந்திரியமும், கழுத்திற்கு மேலே தனித்தனியே இருக்கும். கழுத்திற்குக் கீழே, கை, கால், குய்யங்களில், பாணி, பாதம், உபஸ்தம், மூன்றும் தனித்தனியே இருக்கும். இப்படி தூல சரீர தத்துவங்கள் ஆறு; அதில் குடிபுகுந்த சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் இருபது; ஆகத் தத்துவங்கள் இருபத்தாறும், பஞ்ச பூதங்களின் காரியம் ஆனபடியினாலே ஒருமைப்பாடாக *காரிய சரீரம்* என்று சொல்லப்படும்.

அவித்தையில் பிரதிபிம்பித்த சிதாபாசன், சாக்கிரத்திலே இந்த இருபத்தாறு தத்துவங்களுடனே கலந்து நின்றபோது, *விசுவன்* என்றும், *வியாவகாரிக சீவன்* என்றும் சொல்லப்படுவன். சொப்பநத்திலே, தூல சரீரத்தைவிட்டு, அந்தக்கரணத்துடனே கூடி நின்ற போது, *தைஜசன்* என்றும், *பிராதிபாசிகஜீவன்* என்றும், *சொப்பந கற்பிதன்* என்றும் சொல்லப்படுவன். சுழுத்தியிலே, காரிய சரீர தத்துவங்கள் இருபத்தாறையும்

கைவிட்டு, காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தியிருக்கும்போது, பிராக்ஞன் என்றும், பாரமார்த்திகசீவன் என்றும் சொல்லப்படுவன். பிரம சைதந்நியமும், சாக்கிரத்திற்குச் சாக்ஷியாய் இருக்கும்போது, சீவாத்மா என்றும், சொப்பநத்திற்குச் சாக்ஷியாய் இருக்கும்போது, அந்தராத்மா என்றும், சுழுத்திக்குச் சாக்ஷியாய் இருக்கும் போது, பரமாத்மா என்றும், அவஸ்தாத்திரய சாக்ஷியாய் இருக்கும்போது, ஞாநாத்மா என்றும், கூடஸ்தன் என்றும் சொல்லப்படும்.

இப்படி சீவனுக்கு மூன்று சரீரங்களும், மூன்று அவஸ்தைகளும் சொல்லப்பட்டன.

இனி, ஈசுரனுக்கு மூன்று சரீரங்களும், மூன்று அவஸ்தைகளும் சொல்லும்படி:

கற்பிதப் பிரபஞ்ச வடிவமாகத் தோற்றுகின்ற தூல பஞ்ச பூதங்களும், அந்தப் பூதங்களிலே தோன்றும் மூன்று சாதியாய் இருக்கின்ற தூல சரீர சமஷ்டியும் கூடி, ஈசுர தூல சரீரம் என்றும், விராட் என்றும் சொல்லப்படும். இதனுடனே கூடி சாக்கிராவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன், வைசுவானரன் என்றும், இந்த இருவகைக்கும் அதிஷ்டாந சைதந்யம் பிரமா என்றும் சொல்லப்படும். சூக்ஷ்ம பூதங்கள் ஐந்தும்,

அந்தப் பூதங்களிலே தோன்றிய, சூக்ஷ்ம சரீர சமஷ்டியும்கூடி, *ஈசுர சூக்ஷ்ம சரீரம்* என்றும், *இரண்யகர்ப்பம்* என்றும் சொல்லப்படும். இதனுடனே கூடி சொப்பநாவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன், *சூத்ராத்மா* என்றும், இந்த இரு வகைக்கும் அதிஷ்டாந சைதந்யம் *விஷ்ணு* என்றும் சொல்லப்படும். இந்தத் தூலம், சூக்ஷ்மம் இரண்டின் வாசனையுடனே கூடியிருக்கின்ற மாயை, *ஈசுர காரண சரீரம்* என்றும், *அவ்யாகிருதம்* என்றும் சொல்லப்படும். இதனுடனே கூடி சுழுத்தி அவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன், *அந்தர்யாமி* என்றும், இந்த இருவகைக்கும் அதிஷ்டாந சைதந்யம், *உருத்திரன்* என்றும் சொல்லப்படும். சீவன், தன் மூன்று அவஸ்தைகளிலும், தன் மூன்று சரீரங்களாயிருக்கின்ற இருபத்தேழு தத்துவங்களுடனும் நான் என்று கலந்து நிற்கின்றது போல, ஈசுரனும் தன் மூன்று அவஸ்தைகளிலும் தன் மூன்று சரீரங்களாயிருக்கின்ற முப்பத்திரண்டு தத்துவங்களுடனும் கலந்து நிற்பன். ஆகையினாலே, சீவ சிதாபாசன் தன் சரீர மாத்திரமே கலந்து நிற்பன். ஈசுரன், தன் சரீரமாகிய சகல சரீரங்களோடும், சகல பிரபஞ்சங்களோடும் கலந்து நிற்பன். இந்த இருவகைக்கும் சாக்ஷியாய் இருக்கின்ற பிரம சைதந்யமும், சகல சரீரங்களிலும் சகல பிரபஞ்சங்களிலும் நிறைந்து, அப்பாலும் பத்துத் திக்கையும் அதிக்கிரமித்து எல்லையற்றிருக்கும்.

சீவனுக்கு தூல சரீர வியவகாரத்திற்கு, அந்நமய மான சட்கோச தத்துவங்கள்-6, சூக்ஷ்ம சரீர தத்துவங் கள்-20, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-31. சூக்ஷ்ம சரீர வியவகாரத்திற்கு, சூக்ஷ்மசரீர தத்துவங்கள்-20, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம் 5 ஆகத் தத்துவங்கள்-25. காரண சரீர வியவகாரத்திற்கு, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம் 5. சீவ வியவகாரத்திற்கு, சீவன், ஈசுரன், பிரமம்-3 சாக்ஷி வியவகாரத்திற்கு, சாக்ஷி-1. ஈசுரனுக்குத் தூலசரீர வியவகாரத்திற்கு, சமஷ்டி அந்நமயகோச தத்துவங்கள் 6, சமஷ்டி சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் 20, சமஷ்டி சீவன், அவித்தை 2, ஈசுரன், வித்தை, பிரமம்-3, தூலபூதங்கள்-5 ஆகத் தத்துவங்கள் -36. சூக்ஷ்ம சரீர வியவகாரத்திற்கு, சமஷ்டி சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, சமஷ்டி சீவன், அவித்தை-2, சூக்ஷ்ம பூதங்கள்-5, வித்தை, ஈசுரன், பிரமம்-3, ஆகத் தத்துவங்கள் 30. காரணசரீரவியவகாரத்திற்கு, வித்தை ஈசுரன், பிரமம்-3. ஈசுர வியவகாரத்திற்கு ஈசுரன், பிரமம்-2. பிரம வியவகாரத்திற்கு, பிரமம்-1. இந்திரிய வியவகாரத்திற்கு, இந்திரியம்-1 சட்கோச தத்துவங்கள்-6, அந்தக்கரணம்-5, வாயு-5 சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-22.

மநோராச்சிய வியவகாரத்திற்கு, அந்தக் கரணம்-5, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-10.

இப்படி தத்துவங்களினுடைய தோற்றமும் நிலையும் சொல்லப்பட்டன.

இனி, தத்துவங்கள் ஒடுங்குகின்ற முறை சொல்லுகின்றோம்.

சகல சீவரிடத்திலும் இருக்கின்ற தூல சரீரங்கள் அனைத்தும் தமக்கு ஆதாரமான தூல பூதங்களிலே மடிந்து பூதம் மாத்திரமாக ஒடுங்கும். இந்த தூல பூதங்களும், பஞ்சீகரணம்விட்டுத் தந் மாத்திரைகளான தமோகுண பூதங்களாக மிஞ்சும். அப்போது கேவலம் இரண்யகர்ப்ப அவஸ்தை என்று சொல்லப்படும். சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் இருபதும் கட்டுவிட்டுப் பூதங்களினுடைய சத்துவ குணமும் இரஜோ குணமுமாக ஒடுங்கும்; அஃது எங்ஙனம் எனின்:- சகல பிராணிகளிடத்திலும் இருக்கின்ற அகங்காரமும், கிராணேந்திரியமும், உதாநவாயுவும், உபஸ்தேந்திரியமும் பிருதிவியில் ஒடுங்கும். சித்தமும், சிங்ஙுவையும், சமாநனும், பாயுருவும், அப்புவில் ஒடுங்கும். புத்தியும், சக்ஷுவும், அபாநனும், பாதமும் அக்கிநியில் ஒடுங்கும். மநதும், துவக்கும்,

பிராணனும், பாணியும், வாயுவில் ஒடுங்கும். உள்ளமும், சுரோத்திரமும், வியாநனும், வாக்கும், ஆகாசத்தில் ஒடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாகும். இந்த சூக்ஷ்ம பூதங்களும், பிருதிவி அப்புவில் கரைந்து ஒடுங்கும். அப்புவும், அக்கிநியில் சுவறி ஒடுங்கும். அக்கிநியும், விளக்குப்போல வாயுவில் அணைந்து ஒடுங்கும். வாயுவும், ஆகாசத்திலே ஓய்ந்து ஒடுங்கும். ஆகாசமும், விக்ஷேப சத்தியில் ஒடுங்கும். ஆவரண சத்தியும், விக்ஷேப சத்தியும், மூலப் பிரகிருதியின் தமோகுண மாத்திரமாய், ஆலமரம், ஆலம் விதையில் ஒடுங்கினாற்போல, இன்னும் ஒரு சிருஷ்டிக்கு வித்தாக, மாயையிலும், அவித்தையிலும் ஒடுங்கும். இந்த மாயையும், அவித்தையும், அதி நுண்மையான மூலப் பிரகிருதி என்று சொல்லப்பட்ட விந்து தத்துவத்தில் ஒடுங்கும். அந்த விந்துவும், பாம்பு என்கின்ற பெயர்போய் பழுதையாகக் கண்டாற்போல தனக்கு அதிஷ்டாந சைதந்யமான பிரம சைதந்யம் மாத்திரமாக ஒடுங்கும். இப்படி பொய்யெல்லாம் மெய்ப்பொருள் ஒன்றாகக் கண்டு, அதுவே சுபாவ சித்தமாய், நிசமாயிருக்கிற தன் வடிவு என்னக்கண்டு தெளிந்து, கவலை கெட்டிருக்கின்றவனே சீவன் மூத்தன்.

இப்படி தத்துவங்களின் ஒடுக்கம் சொல்லப்பட்டது.

இப்படி தோன்றி ஒடுங்கின தத்துவங்கள்-36. அவையாவன:-பூதங்கள்-5, ஸ்தூல சரீர தத்துவங்கள்-6, சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, காரண சரீரமான மாயை, அவித்தை-2, இவற்றில் பிரதிபிம்பித்த சீவன், ஈசுரன்-2, இவைகட் கெல்லாம் அதிஷ்டாந சைதந்யமாய் இருக்கின்ற ✤ பிரமம்-1, இவையாம். இவைகளில், பூதங்கள்-5, மாயை-1, மாயாப் பிரதிபிம்பரான ஈசுரன்-1, பிரமம்-1 ஆக, இந்த எட்டும் சகல பிராணிகளுக்கும் ● சமுதாயமாக அநுபவிக்கப்படும். மற்றை இருபத்தெட்டும், அவன் அவனுக்கு ○ பிருதக் ஆக அநுபவிக்கப்படும். அஃது எங்ஙனம் எனில், பிருதிவி தத்துவம் ஒன்று இறக்கில் எல்லோருக்கும் ஆதாரம் இல்லை. மழை மறுக்கில், எல்லோருக்கும் சலம் இல்லை. தேயு இல்லாதிருந்தால், பாகம் இல்லை. வாடை, தென்றல் இல்லாவிட்டால், வாயு இயக்கம் இல்லை. ஆகாசம் இறக்கில் ஒருவருக்கும் அவகாசம் இல்லை. மாயையும், மாயாப் பிரதிபிம்பரும் இறக்கில் சகல சமயங்களுக்கும் தெய்வம் இல்லை. பிரமம் இல்லையேல் ஒருவருக்கும் அறிவு இல்லை; ஆகையால் இந்த எட்டும் எல்லோருக்கும் சமுதாய

✤ பிரமத்திற்குத் தோற்றம் ஒடுக்கம் கூறினது நாம கற்பனையைப் பற்றி யென்க.

● சமுதாயம்–பொது. ○ பிருதக்கு–வேறு.

மாம். பிருதக் எங்ஙனம் எனின்? ஒருவனுக்கு ஸ்தூல சரீரம் இறக்கில், எல்லோருக்கும் ஸ்தூல சரீரம் இற வாதபடியினாலும், சூக்ஷ்ம சரீரத்தில் ஒருவனுக்கு அங்க ○வைகல்யம் வந்தால், எல்லோருக்கும் வாராதபடியி னாலும், முத்தராயிருந்த சுகர் வாமதேவர் முதலியோ ருக்கு அவித்தையும், சீவனும் இறந்துபோயிருக்க, மற் றையோருக்கெல்லாம் அவித்தையும், சீவனும் இறவாத படியினாலும், இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும், அவனவனுக்குப் பிருதக் என்பதில் சந்தேகமே இல்லை.

இந்தத் தத்துவங்கள் முப்பத்தாறில், எப்போதும், தானாகவே காணப்படுகிற தத்துவம் ஒன்று. எப்போதும் தனக்கு அந்நியமாகக் காணப்படுகிற தத்துவங்கள் ஏழு, தான் ஆகவும், தனக்கு அந்நியம் ஆகவும், அநுபவிக்கப் படுகிற தத்துவங்கள் இருபத்தெட்டு; அஃது எங்ஙனம் எனில், அவஸ்தாத்திரய சாக்ஷியாய் இருக்கின்ற பிரம சைதந்யம், எல்லா அவஸ்தைகளிலும், தான் ஆக விளங்குகையினாலும், மற்றைத் தத்துவங்கள் போல, தனக்கு அந்நியமாக விளங்காதபடியினாலும், அந்த பிரம சைதந்யம் ஒன்று மட்டுமே தான் ஆகக் காணப் படுகிறது. பஞ்ச பூதங்கள், மாயை மாயாப் பிரதிபிம்பர்

○ வைகல்யம்–குறைவு.

ஆக ஏழும் தம் தம் தொழிலான வெட்டு, கொத்து, உழவு, பஞ்ச கிருத்தியம், தசாவதாரம் முதலானவை, ஒரு காலும் தன்னுடைய தொழிலாகக் காணப்படாத படியினாலே, தனக்கு அந்நியங்களே அல்லாமல் தான் ஆகமாட்டா. மற்றை இருபத்தெட்டுத் தத்துவங் களுள்ளே நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரமசாரி, நான் கிருகஸ்தன், நான் வாநப் பிரஸ்தன், நான் சந்நியாசி, நான் ஆண், நான் பெண், நான் கறுவல், சிவலை, கட்டையன், நெட்டையன், நான் பருத்தேன், இளைத் தேன் என்று தான் ஆக வழங்குகிற, ஸ்தூல சரீரம் ஆறு தத்துவங்களும், மற்றொரு வேளையிலே, தனக்குப் புறம்புபட்டு என் மாடு, என் கன்று என்றாற் போல, என் சரீரம் பருத்தது, இளைத்தது, நரைத்தது, என் சரீரம் பிறந்து இத்தனை நாளாயிற்று என்று தான், வேறு தூல சரீரம் வேறாக வழங்குகிறபடியினாலும், நான் கண்டேன், கேட்டேன், தொட்டேன், போகித்தேன், கொடுத்தேன், வாங்கினேன், நடந்தேன், புசித்தேன், சிந்தித்தேன், நிச்சயித்தேன், இந்தப் பஞ்சத்திற்குச் சீவித்தேன் என்று தான் ஆக வழங்குகிற சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் இருபதும், மற்றொரு வேளையிலே, தனக்குப் புறம்புபட்டு, என் வீடு, என் உடைமை என்றாற்போல, என் கண், என் காது, என் மூக்கு, என்

நாக்கு, என் கை, என் கால், என் மநம், என் புத்தி, என் அகங்காரம், என் சித்தம், என் பிராணன் என்று, தான் வேறு, அவைகள் வேருக வழங்குகிறபடியினுலும், நான் அறிவேன், அறியேன் என்று, தான் ஆக வழங்கு கிற அஞ்ஞாநமும், சிதாபாசனும், மற்ெருரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு, என் அஞ்ஞாநம், என் சீவன் என்று, வழங்கக் கண்டபடியினுலும், இந்த இருபத் தெட்டுத் தத்துவங்களும், தான் ஆகவும், தனக்கு அந்நியம் ஆகவும், வழங்குகின்றது சித்தம்.

இப்படிச் சொன்ன குருவைப் பார்த்துச் சீடன் கேட்கும்படி :

இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் தான் ஆனுல், சாக்ஷியைப்போல, ஒரு தன்மையாகத்தோற்ற வேண்டுமே அல்லாமல், பஞ்ச பூதங்களைப் போல, தனக்கு அந்நியமாகக் காணக் கணக்கில்லை. இந்த இருபத்தெட்டும். தனக்கு அந்நியமேயாளுல், எப்போ தும் புறம்புபட்டே இருக்க வேண்டுமல்லாமல், தான் ஆக வழங்கக் கணக்கில்லை. தானுமாய்த் தனக்கந் நியமுமாய் இருக்குமென்கிறது, இருட்டாதித்தன் என்ருற் போலும், வேளாள தீக்ஷிதன் என்ருற் போலும், விருத்தமாம் என்னும் சங்கைக்கு:–பரமார்த்த மாகத் தான் என்கின்றது ஒரு வகையும், அத்தியா

சத்திஞலே தான் என்கின்றது ஒரு வகையும், ஆக இருவகையும் உண்டு. சாக்ஷி சைதந்யத்தை தான் என்கின்றது, பரமார்த்தம் அல்லாமல் உபசாரம் அல்ல. தனக்கு அந்நியமாய் இருக்கின்ற இந்த இருபத்தெட்டையும், தான் என்கின்றது, கட்டையைக் கள்ளன் என்ருற்போலும், பழுதையைப் பாம்பு என்ருற்போலும், புத்திர தாராதிகளைத்தான் என்ருற்போலும், மயக்கமே அல்லாமல் உண்மை அல்ல. ஆகையிஞல், அஞ்ஞாந காலம் தொடங்கி தான்அல்ல என்று காணப்பட்ட தத்துவங்கள்-7. இப்போது இப்படி விவேகம் பண்ணின பின், தான் அல்ல என்று காணப்பட்ட தத்துவங்கள்-28 ஆக இந்த 35 தத்துவங்களையும், அததற்குச் சொன்ன, குணம் குறிகளுடனே கூடக் காண்கின்ற அறிவானது, கடத்தைப் பார்க்கின்றவன் கடத்திற்குப் புறம்பாகவே இருந்து, கடத்தைப் பார்க்கின்றது போல, அவைகளை அறிகின்றது என்றும், முப்பத்தாருந் தத்துவமாகிய அதுவேதான் என்றும், அதுவே பரமசிவம் என்றும், கலக்கமறத் தெளிந்தவனே சிவ தரிசநம் உடைய சீவன்முத்தன் என்று சொல்லப்படுவன் என்று உத்தரம்.

இப்படி பிரமமே தாம் என்றும், மற்றை முப்பத்தைந்து தத்துவங்களும் தமக்கு அந்நியம் என்றும், பிரித்து அறியாத அவிவேகிகள், அகங்காரக் கிரந்தியி

ஞலே, புத்திர தாராதிகள் தபிக்கின்றதைத் தாம் தபிக்கிறோம் என்கிற மூடகரம்போல, இந்த இருபத்தெட்டினுடைய தொழில்களையும் தம் தொழில் என்று மயங்குகின்றபடியினலே, இந்த இருபத்தெட்டினுலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினுல் கட்டுப்பட்டு, அந்தக் கர்மத்தின்படியே சநந மரணுதி சம்சாரத்திலே அடிபடுகிறோம் என்று மயங்குவர். பிரம சைதந்நியமே தான் என்றும், மற்றை முப்பத்தைந்தும் தான் அல்ல என்றும் தெளிந்த விவேகியானவன், அகங்காரக் கிரந்தி அற்றபடியினுல் இந்த இருபத்தெட்டினுடைய தொழில்களையும் நான் செய்யவில்லை என்றும், இந்த இருபத்தெட்டும் புசிக்கின்றதை நான் புசிக்கவில்லை என்றும், திடப்படத்தேறி மயக்க மற்று இருக்கின்ற படியினுல், இந்த இருபத்தெட்டினுலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டுக் கர்மம் இல்லாதபடியினுல், சநந மரணுதி சம்சாரம் இல்லாமல், முத்தனுய்ப் பிரம மாத்திரமாகவே இருப்பன். இவனைச் சீவந் முத்தன் என்றும் திடப் பிரக்ஞன் என்றும் அதிவர்ணுச்சிரமி என்றும் குணுதீதன் என்றும், பகவற் பத்தன் என்றும், பிராமணன் என்றும், வாசிட்டம் முதலிய சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத் தத்துவங்களை விசாரம் பண்ணி மோக்ஷம் அடையக் கடவர்.

ஓம் தத் ஸத்

திருப்புவனம், காசிகாநந்த ஞாநாச்சாரிய சுவாமிகள் இயற்றிய நூல்கள்.

1	ஹரிமீடே, ஹரிதத்வ முக்தாவலி பதஉரை	0-75
2	வேதாந்த சித்தாந்த முத்தாவலி வசநம்	0 50
3	பகவற்கீதை 15 வது அத்தியாயம் சமஸ்கிருதம் தமிழ் பதஉரை, தமிழ்பாட்டு, தமிழ் உரை மூர்க்கசதகம், சமஸ்கிருதம் தமிழ் பதஉரை நிர்க்குண அஷ்டோத்தர சதநாமாவளி, சமஸ்கிருதம் தமிழ் நாலுசேர்ந்தது	0-50
4	கீதாசாரத் தாலாட்டு, நக்ஷத்திர விளக்கஉரை	0-50
5	சசிவந்நபோதம், பதார்த்த பாஸ்கரன்உரை	2 00
6	பக்தி (வைராக்கிய) சதக பதஉரை, பொழிப்புரை	1-50
7	மேற்படிஉரை உதாரணக்கவி, பக்தி ரச உரை	1-00
8	கைவல்ய நவநீதம், தத்துவார்த்ததீபிகை உரை, உதாரணக்கவி 233க்கு, ஆதித்தன்உரை	2-50
9	மேற்படி நக்ஷத்திர விளக்கஉரை	0-50
10	சார்த சதக ஸ்தோத்ர ரச மஞ்சரி பரிமள தீப உரை	1-50
11	ஒன்பது துறவியர் பாடிய அருட் பா மாலை கவி 280	1-00
12	திருக்களர், வீர சேகர ஞாந தேசிகர் சரிதம் வசநம்	1-00

13	வேதாந்த சாஸ்திர ரத்நத் திரயம் விவேக சூடாமணி கவி 671, அஞ்ஞவதைப் பரணி கவி 494, பஞ்ச தசிகவி 796 (3) சேர்ந்தது கவி (1961)	3-00
14	கீதாத் திரயம் ஈசுவர கீதை கவி 338, பகவற் கீதை கவி 545, பிரஹ்ம கீதை கவி 547 மூன்று சேர்ந்தது ஆக கவி 1430)	3-00
15	சப்ததா சப்ததி தோத்திர ரசமஞ்சரி கவி 70 நுந்தா ஒளிஉரை	0-75
16	கைவல்ய நவநீதம் கிருதபாந உரை	7 00
17	வேதாந்த சூடாமணி சந்தோஷ தாயிநிஉரை	10 50
18	வேதாந்த சூடாமணிமூலம்	0 50
19	மகாத்ம சரிதாமிருதம் (40 பெயர் சரிதம்)	9 00
20	ஈஸ்வர கீதை - ரகஸ்யார்த்த விளக்கஉரை	2-50
21	கைவல்ய நவநீத நூலில் துவாதச (12) கவிஉரை, ஆராய்ச்சி	0-50
22	சதுர்த்தச வித்யாப்பிரகாசிகை	0-50

கிடைக்குமிடம்

பூவணநாதர் புத்தகாலயம்,

106-A, கீழப்பெருமாள் மேஸ்திரிவீதி

மதுரை - 625001.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், மதுரை.

போன் 32084